பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
22 09 2023 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மகளிர் இடஒதுக்கீடு மசோதா நேற்று மாநிலங்களவையில் ஒருமனதாக நிறைவேறியது.
- தூத்துக்குடியில் புதிய விண்வெளி ஏவுதளம் விரைவில் திறக்கப்படும் என்று மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- கடந்த நிதியாண்டில் சம்பா பருவ நெற்பயிரில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு 560 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் நோக்கில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் திரு சி வி கணேசன் தெரிவித்துள்ளார்.
- உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **Antim Panghal** வெண்கலப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நேற்று மாநிலங்களவையில் ஒருமனதாக நிறைவேறியது.

அவை நடவடிக்கையில் பங்கேற்ற 214 உறுப்பினர்களும் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதன்மூலம் மக்களவை, மாநில சட்டப்பேரவை மற்றும் தில்லி சட்டப்பேரவையில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநிலங்களவையில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகக் கூறினார்.

நாட்டு மக்களுக்கு புதிய நம்பிக்கையை இது ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற அனைத்து அரசியல் கட்சிகளின் நேர்மறை சிந்தனையை இது எடுத்துக்காட்டுவதாக பிரதமர் கூறினார்.

முன்னதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை தாக்கல் செய்து பேசினார்.

நாட்டில் மகளிர் அதிகாரமளித்தலுக்கு இது ஊக்கமளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பேசியபோது, இது மகளிரின் சமூக பொருளாதார அதிகாரமளித்தலுக்கான அரசின் உறுதிப்பாட்டை இம்மசோதா மூலம் அறியப்படுவதாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. மல்லிகார்ஜுன் கார்கே பேசியபோது மகளிர் இடஒதுக்கீட்டின்கீழ், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிஜேபி, திமுக, ஆம் ஆத்மி, பி.ஆர்.எஸ்., ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி, சமாஜ்வாதி, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி உறுப்பினர்களும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்த விவாதத்தில் பங்கேற்று பேசினார்கள்.

மகளிர் இடஒதுக்கீடு மக்களவையில் ஏற்கனவே நிறைவேறியுள்ளது.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறியதற்கு தாங்கள் வரவேற்பு தெரிவிப்பதாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

தூத்துக்குடியில் புதிய விண்வெளி ஏவுதளம் விரைவில் திறக்கப்படும் என்று மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதுகுறித்துப் பேசிய அவர், இதற்காக 90 சதவீத நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்கான எஞ்சியுள்ள பணிகளை விரைவில் நிறைவு செய்யுமாறு தமிழக அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

விண்வெளித் துறையில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 150ஆக அதிகரித்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அரசு பயிர்காப்பீட்டுத்திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில் சம்பா பருவ நெற்பயிரில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு 560 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த பயிர் காப்பீட்டுத்திட்டத்தின்கீழ், அறிவிக்கை செய்யப்பட்ட மாவட்டங்களில் இயற்கை இடர்பாடுகளால் 7 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்பட்ட மகசூல் இழப்பிற்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழஙகப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, 6 லட்சம் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டிலேயே தமிழத்தில்தான் தொல்லியல் ஆய்வுகள் அதிக அளவில் நடைபெறுவதாக அத்துறைக்கான் அமைச்சா் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் "அண்மைக்கால ஆய்வுகள் காட்டும் தமிழ்நாட்டு வரலாறு" என்ற கருத்தரங்கை அவா் தொடங்கி வைத்துப் பேசினார்.

கீழடி, பொருநை, வெம்பக்கோட்டை வைப்பாறு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலம் தமிழகத்தின் பாரம்பரிய வரலாறு குறித்து அறிந்துகொள்ள முடிவதாக திரு. தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் குழந்தை தொழிலாளர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் நோக்கில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் கூறியுள்ளார்.

நேற்று சென்னையில் தொழிலாளர் துறை அலுவலர்களின் பணித்திறனாய்வு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

தொழில் நிறுவனங்களுக்கும், தொழிற்சங்கத்தினருக்கும் பாலமாக இருந்து தொழிலாளர் துறை அலுவலர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

காவிரி நீர் விவகாரத்தில் மாநில அரசுக்கு தமிழக காங்கிஸ் உறுதுணையாக இருப்பதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. கே.எஸ் அழகிரி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் நடைபெற்ற நாடாளுமன்ற வாக்குச்சாவடி பயிற்சி பாசறை கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியலுக்கு அப்பாற்பட்டு மாநில உரிமைக்காக காங்கிரஸ் கட்சி, அரசுக்கு ஆதரவாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

தாம் மேற்கொண்டு வரும் பாதயாத்திரையின் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டம் காங்கேயத்திற்கு நேற்று சென்ற அவர், 2047ஆம் ஆண்டுக்குள் உலகில் சிறந்த நாடாக இந்தியா இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி இலக்கு வைத்துள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>

திருவாரூர் அரசு மருத்துவமனையில் டெங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 50 படுக்கைகள் கொண்ட காய்ச்சல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதன் டீன் திரு ஜோசப் ராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று திருவாரூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இலங்கையின் மகோ பகுதியில் இருந்து அனுராதபுரம் வரையிலான ரயில் வழித்தடத்தில் சிக்னல் அமைப்பதற்கான பணிகளுக்காக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சகம் இந்தியாவின் **IRCON** சர்வதேச நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது.

<<<<>>>>

சீனாவில் ஜியாங்சு மாகாணத்தில் இன்று மிக கனமழைக்கும், பலத்த காற்றுக்கும் வாய்ப்பிருப்பதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்யஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நடிகர் சுரேஷ் கோபிக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குற்றச் செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்களை விவாத நிகழ்ச்சிகளில் ஈடுபடச் செய்ய வேண்டாம் என்று தொலைக்காட்சி நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

சேலம் மாவட்டம் ஏத்தாப்பூரில் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 4 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளை எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

கடலூரில் பல்வேறு துறைகள் மூலம் 786 பயனாளிகளுக்கு 44 கோடி ரூபாய் மதிப்பிலான தொழிற்கடன் ஆணைகளை மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்.

<<<<>>>>

திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி அருகே போலி தங்கக்கட்டிகளை விற்ற 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **Antim Panghal** வெண்கலப் பதக்கம் வென்றார்.

செர்பியாவின் பெல்கிரேடில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் 16-6 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்வீடனின் **Emma Jonna Densie**-ஐ வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் **Antim Panghal** பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

<<<<>>>>

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மொஹாலியில் நடைபெற உள்ள இப்போட்டி, பிற்பகல் மணி ஒன்று முப்பதுக்கு தொடங்குகிறது.

இரு அணிகளும் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்கின்றன.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

<<<<>>>>

ஆசிய விளையாட்டு மகளிர் கால்பந்து போட்டியில் சீன தைபே 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கேரளா அணி 2-1 என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

<<<<>>>>

ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா – திவிச் சரண் இணை அரை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிப் போட்டியில் இந்த இணை 5-7, 6-4, 10-8 என்ற செட் கணக்கில், ஸ்லோவேனியாவின் **Bor Artnak** – ருமேனியாவின் **Dragos Nicolae** இணையை வென்றது.

<<<<>>>>